**களுத்துறை மாநகர சபை ( கொடுக்கல் வாங்கல் அறிக்கை ) - 2023**

---

களுத்துறை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தினதும் (252 அதிகாரம்) ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

## 1.3 களுத்துறை மாநகர சபையை ஸ்தாபித்தலும் நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தலும்

2022 செப்தெம்பர் 06 ஆந் திகதி இலக்கம் 2296/05 என்ற அதிவிசேட வர்த்தமானியின் மூலம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் விடயப் பொறுப்பு அமைச்சரினால் 2023 மார்ச் 19 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் களுத்துறை நகரசபை கலைக்கப்பட்டு 2023 மார்ச் 20 ஆம் திகதி முதல் களுத்துறை மாநகர சபை ஸ்தாபிக்கப்பட்டு அத்திகதியில் உறுப்பினர்களின் காலம் அமுல்படுகின்ற திகதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 09 ஆவது பிரிவின் பிரகாரம் குறித்துரைத்த சபை உறுப்பினர்கள் தெரிவு செய்ய முடியாதிருந்த போதிலும் சபை அத்திகதியின் போது ஸ்தாபிப்பதாக கவனத்தில் கொள்ளல் வேண்டும். எனினும் மாநகர சபையினால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக் கூற்றுக்கள் தயாரித்து இந்த அறிக்கைத் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய 09/2018 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | மாநகர சபையின் கட்டிடம் தவிர ஏனைய சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது மோட்டார் வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய சொத்துக்கள் மீள் மதிப்பீட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. | தொடர்புடைய விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதி இலக்கம் 30/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | 22 வாகனங்களுக்குரிய எரிபொருள் எரிவு தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 பெப்ரவரி 20 ஆந் திகதி இலக்கம் 03/2018 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் (iii) ஆம் பிரிவு | முன்னைய சேவைக் காலம் திருப்திகரமாக மற்றும் ஒழுக்காற்று தண்டணைகள் பெறாதிருந்தமையை உறுதிப்படுத்தி ஓய்வு பெற்றுச் சென்றவரை மீண்டும் சேவைக்கு சேர்க்க முடியுமாக இருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டில் ஒழுக்காற்று தண்டணை விதிக்கப்பட்ட ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் 2019 மார்ச் முதல் 2023 ஆம் ஆண்டின் மார்ச் வரை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 3,576,275 செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் போது ஒழுக்காற்று கட்டளை இடப்பட்டிருந்தமை அறிந்திருந்த போதிலும் ஆளுனர் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | மேற்படி |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை ரூபா 31,333,371 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 15,202,901 அதாவது 48 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வரி அறவிடுதல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வாடகை நிலுவை ரூபா 93,000 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 68,200 அதாவது 73 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (ii) | வாடகை வருடாந்த சிட்டையிடல் ரூபா 247,663 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா | நிலுவையை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| 182,813 அதாவது 73 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ) ஏனைய வருமானம்**<br>மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 58,078,025 ஆகும். | 2024 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 45,594,010 கிடைக்க வேண்டியிருந்ததுடன் மிகுதி எதிர்காலத்தில் அறவிடப்படும். | பெறவேண்டிய முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றினின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) களுத்துறை மாநகர சபைக்குரிய 04 ஏக்கர் காணி 2009 திசெம்பர் 23 அந் திகதி முதல் 2019 திசெம்பர் 23 வரை மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உடன்படிக்கையின் பிரகாரம் எந்த ஒரு வாடகைத் தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டுத் திணைக்களத்தில் இருந்து அந்த நிலத்திற்குரிய மதிப்பீட்டை பெற்று மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலுவை வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) 2009 திசெம்பர் 23 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட வாடகை உடன்படிக்கைக் காலம் 2019 ஆம் ஆண்டில் முடிவடைந்திருந்த போதிலும் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மீண்டும் 2023 ஆகஸ்ட் முதல் எதிர்வரும் ஒரு வருட காலத்திற்காக உக்காத கழிவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக தொன் ஒன்றிற்கு ரூபா 4,500 வீதம் மாநகர சபையினால் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு செலுத்த வேண்டும் என சபைக்கு பாதகமான | 2024 சனவரி 26 முதல் ஒரு வருட காலத்திற்கு சபையில் உக்குகின்ற கழிவுப் பொருள் கட்டணத்தை அறவிடாமல் பெற்றுக் கொள்வதற்கும் அதற்குப் பதிலாக நிலத்தை பயன்படுத்துவதற்கும் உடன்படிக்கை செய்யப்பட்டதுடன் உக்காத கழிவுப் பொருட்களை மீளக் கொண்டு செல்வதற்காக 2023 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு பிளிசறு செயற்திட்டத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்மான ஆதனங்களை முறையாக வாடகைக்கு வழங்குதல் வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | நிபந்தனை ஒன்று உள்ளடக்கி உடன்படிக்கை செய்திருந்தது. அதன் பிரகாரம் 14 வருட நிலுவை வாடகை அறவிடாமல் உக்காத கழிவுப் பொருள் மெற்றிக் தொன் 351 இற்காக கூட்டுமொத்தமாக ரூபா 1,880,130 தொகை 2023 ஆம் ஆண்டின் இறுதி 05 மாதத்தில் மாநகர சபையினால் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2022 ஆம் அண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் காண்பிக்கப்பட்ட ரூபா 43,500 ஆன 02 கோலோஸ் பரல்கள் பற்றாக்குறை, முறையான அங்கீகாரம் இன்றி பிலிப்னேரி ஆலயத்தில் உள்ளக வீதி அபிவிருத்தி செய்வதற்காக களஞ்சியத்தில் இருந்து மூலப்பொருள் வழங்குவதற்கும், விநியோகித்தல் கட்டளை 242 இன் கீழ் தார் இடுவதற்காக 04 பரல்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் தார் இடப்படாமை மற்றும் அந்த 04 பரல்கள் வேலைக் கட்டுப்பாட்டாளரின் பொறுப்பில் காணப்படாமை போன்ற விடயங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 மற்றும் 156 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | விநியோகித்தல் கட்டளை இன்றி தலைவரின் கட்டளையின் அடிப்படையில் நகர சபையின் வீதிகளை அமைப்பதற்கு தயாரிப்பதற்கு தார் பரல்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையால் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உரித்தற்றதாக இருந்தது. | முறையான பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபைக்குச் சொந்தமான 64 கடைகளுக்காக கால ரீதியில் வாடகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு மாநகர சபைக்குரியதாக இருந்த போதும் சபைக்குச் சொந்தமான கோவைகள் காணப்படாத 08 கடைகள் சபைக்கு மீண்டும் கையேற்று கேள்வி | வாடகை உடன்படிக்கை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாடகை உடன்படிக்கை கால ரீதியில் புதுப்பிக்க வேண்டி இருந்ததுடன் சபைக்குச் சொந்தமான ஆதனங்களின் உரித்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களை |

| | | | |
|---|---|---|---|
| | கோருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வைத்திரத்தல் வேண்டும். |
| (ஆ) | நவீன கடைத் தொகுதியில் 138 கடைகள் 2021 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் 17 கடைகளுக்காக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் இருந்து சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | முத்திரை வைத்து சபைக்கு கையேற்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வாடகையாளர்களினால் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் மூடப்பட்டுள்ள 106 கடைகள் தொடர்பாக வாடகை உடன்படிக்கையின் 19 ஆவது நிபந்தனையின் பிரகாரமும், வாடகைப் பணம் செலுத்தாமை தொடர்பாகவும் வாடகை உடன்படிக்கையின் 21 ஆம் பிரிவின் பிரகாரமும் மாநகர சபை நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் மாநகர சபைக்கு கிடைக்க வேண்டிய வருடாந்த கடை வாடகை 03 வருடங்கள் முதல் சிட்டையிடப்படாமையினால் சபைக்கு கூட்டுமொத்தமாக ரூபா 21,000,000 தொகைக்கு அண்ணளவான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சந்தைத் தொகுதியின் கட்டமைப்பை ஸ்தாபித்தலின் அடிப்படையில் வியாபாரங்கள் ஆரம்பிக்கப்படாது இருந்தமை மற்றும் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் கடை வாடகை அறவிடப்படவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 மார்ச் 02 ஆந் திகதிய இயந்திரப் பொறியியலாளர் பரிந்துரையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான சொலெக்ஸ் தண்ணீர் பௌசர், சக்சன் பம்பி உடனான பௌசர் மற்றும் நிசான் தீயணைப்பு வண்டி பழுதுபார்த்தல், பொருளாதார ரீதியாக ஆக்கபூர்வமானதாக இல்லாதிருந்தமை குறிப்பிடப்பட்ட போதும் அந்த வாகனம் தொடர்பாக 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்ததுடன் அந்த 03 வாகனங்கள் | மோட்டார் வாகன ஆணையாளரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. | உரிய குறைபாடுகளை சரி செய்து இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரை அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவும் இல்லை. | | |
| (ஆ) 2022 ஒக்தோபர் 16 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையில் விற்றுத் தீர்ப்பதற்காக பரிந்துரை செய்யப்பட்ட சபைக்குச் சொந்தமான இரண்டு டெக்டர்கள் இலக்கத் தகடு காணப்படாமையால் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் விற்றுத் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மேற்படி |
| (இ) சபைக்குச் சொந்தமான டெக்டர் டெய்லர் மற்றும் டெக்டர் 2021 ஆம் ஆண்டு முதல் விற்றுத் தீர்ப்பதற்காக இனங் காணப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேற்படி |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மாநகர சபையினால் சேகரிக்கப்படுகின்ற உக்காத கழிவுப் பொருட்கள் கரவலப்பிட்டி தகனக் கூடத்திற்கு போக்குவரத்து செய்வதற்காக டிப்பர் வண்டி ஒன்றை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கு உரியதாக 2022 ஒக்தோபர் 10 ஆந் திகதிய பெறுகையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேற்படி |
| (அ) தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.20 ஆம் பந்தியின் பிரகாரம் கேள்வி மதிப்பீடு மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் முன்னர் காண்பிக்கப்பட்ட அளவிடைகள் மாற்றுதல் அல்லது மேலதிக அளவிடைகளை உள்ளடக்காதிருக்க வேண்டியிருந்த போதிலும் கேள்வி மதிப்பீடு செய்கின்ற சந்தர்ப்பத்தில் புதிய அளவிடைகள் இரண்டு உள்ளடக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு புதிய அளவிடைகள் உள்ளடக்கப்பட்டமையால் ரூபா ரூபா 24,000 ஆன ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த வழங்குனருக்கு கேள்வி கையளிப்பதற்கு பதிலாக ரூபா 37,900 உயர்ந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கேள்வி | அளவுக் குறிகாட்டிகள் போதியளவில் இல்லாமையினால் கேள்விதாரருடன் மேற்கொள்ளப்பட்ட மேலதிக அளவிடைகள் தயாரித்து அதன் பிரகாரம் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையளிப்பதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்திருந்தது. | | |
| (ஆ) | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.8.6 பிரிவின் பிரகாரம் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட சகல நிபந்தனைகளுக்கும் இணங்க கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததா என மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் கேள்வி மதிப்பீடு செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களில் ''கழிவுப் பொருள் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படுகின்ற வாகனம் தமது பெயரில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.'' என்ற நிபந்தனை பூர்த்தி செய்யப்படாத நிறுவனத்திற்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. | இரண்டாவது தடவை மதிப்பீட்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட நிபந்தனையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | மேற்படி |
| (இ) | இவ்வாறு தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் விதிகளுக்கு முரணாக கேள்வி கையளித்தமையால் 2023 சனவரி மற்றும் பெப்ரவரி என்ற 02 மாதங்களில் 12 பிரயாணத் தடவைகளுக்காக ரூபா 166,800 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிதி நட்டத்திற்குப் பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டள்ளது. | தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமானம் 133(1) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அதன் செயலாற்றலைக் கட்டியெழுப்புவதற்காக உதவும் வகையில் செயற்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதும் சபையின் உள்ளகக் கண்காய்வினால் காணி கூறிடல் உறுதிப்படுத்துதல், ஆதனவரி மற்றும் கடை வாடகை அறவிடுதல், வாகனங்களின் பயன்பாடு, பெறுகை போன்ற விடயங்கள் தொடர்பான போதியளவான கணக்காய்வு | எதிர்காலத்தில் அந்தப் பிரிவுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். | நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளையும் மேவுகை செய்யும் வகையில் போதியளவான உள்ளக் கணக்காய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

மேற்கொண்ட உள்ளளக் கணக்காய்வு ஐயவினா விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 சுற்றாடல் பிரச்சனைகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற மலக் கழிவுகள் உரிய பிரகாரம் அகற்றுவதற்காக மூன்று வருடங்கள் முதல் சபையினால் கழி பௌசர் சேவை பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | காணப்படுகின்ற கழி பௌசர் உடைந்திருந்தமையினால் புதிய கழி பௌசர் ஒன்றை கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | தொடர்புடைய பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |